# பாதுகாப்பு அமைச்சு

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI)

## "இலங்கை தேசிய கட்டிட குறியீட்டின் உருவாக்கம் மற்றும் நிறுவுதல் (NBCSL)" திட்டத்தின் திட்ட அமுலாக்கல் பிரிவுக்கான ஊழியர்களின் ஆட்சேர்ப்பு

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது (NBRI) இலங்கைக்காக சட்டபூர்வமாக செயற்படுத்தக்கூடிய மற்றும் அனர்த்த தாங்குதிறன் மிக்க தேசிய கட்டிட குறியீடு ஒன்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2026-2028 காலத்திற்காக இலங்கை தேசிய கட்டிட குறியீட்டின் உருவாக்கம் மற்றும் நிறுவுதல் (NBCSL)" என்ற தலைப்பிலான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் ஒன்றை செயற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம், நிர்மாணத் துறையில் பாதுகாப்பு, தரம், நிலைத்தன்மை மற்றும் தாங்குதிறனை மேம்படுத்தும் நோக்கில், கட்டமைப்புப் பாதுகாப்பு, தீ பாதுகாப்பு, புவித் தொழில்நுட்ப கருத்தாய்வுகள், அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் நிலையான கட்டிட நிர்மாண நடைமுறைகள் தொடர்பான நவீன தொழில்நுட்பத் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை அறிமுகப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த முயற்சி, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) உள்ளிட்ட முக்கிய தேசிய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பின்வரும் பதவிகளுக்காக ஆர்வமுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

(I) சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலாளர் (01), புவித் தொழில்நுட்ப பொறியியலாளர் (01), கட்டிடக் கலைஞர் (01), கணிய அளவையாளர் (பெறுகை நிபுணர்) (01) – ஒப்பந்த அடிப்படை

**கல்வி: (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொருத்தமான பாடங்களின் இணைப்புகளுடன் புவியியல்/ பொறியியல்/ கட்டிடக் கலை/ கணிய அளவீடு அல்லது பதவிக்கான தொடர்புடைய துறை ஒன்றில் சிறப்புப் பட்டம்.

   **அல்லது**

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொருத்தமான பாடங்களின் இணைப்புகளுடன் விஞ்ஞானம் அல்லது பதவிக்காக தொடர்புடைய துறை ஒன்றில் பொதுப் பட்டம் ஒன்று.

   **அத்துடன்**

   புவியியல்/ பொறியியல்/ கட்டிடக் கலை/ கணிய அளவீடு அல்லது பதவியின் தொடர்புடைய துறை ஒன்றில் பட்டப்பின்படிப்பு பட்டம்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா.

   **அல்லது**

3. பதவிக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்.

**குறிப்பு:** பதவிக்கு தொடர்புடைய ஆராய்ச்சி அனுபவம் மேலதிக அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு**

2026.01.01 இல் இருந்து செயற்படும் - ரூபா 81,675.00 + ரூபா 17,800.00 (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு)

2027.01.01 இல் இருந்து செயற்படும் - ரூபா 91,650.00 + ரூபா 17,800.00 (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு)

**குறிப்பு:**

i. ஒப்பந்தக் காலத்தில் சம்பளம் மாறாது.
ii. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
iii. பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iv. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
v. 22 வயதுக்கு குறையாதவராக மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**மற்ற நன்மைகள்:**

- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு
- நிறுவனத்தினால் 12% EPF மற்றும் 3% ETF பங்களிப்புகளுக்கு உரித்தாகும்
- அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்ட ரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது குறித்த தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுமையான சுயவிபரக் கோவை வழங்கப்பட்ட விண்ணப்பங்களை 2026.06.22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபாலின் கீழ் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**